**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.27/2013 . நாள்.05.02.2025**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மாரியப்பன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | வெங்கடப்ப நாயுடு | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | |

**<u>பி.சா.2 ஆஜர். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. சர்வே எண்.258/7-க்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த சொத்தின் விஸ்தீரணம் 41 சென்ட் ஆகும். அந்த சொத்தானது ஆதியில் முனியப்ப நாயுடுக்கு பாத்தியப்பட்டதாகும். முனியப்ப நாயுடுவின் மகன் வெங்கடப்ப நாயுடு என்றால் சரிதான். வெங்கடப்ப நாயுடு தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 05.08.1950 ஆம் தேதி முத்துகவுண்டரிடம் அடமானம் வைத்தார் என்றால் சரிதான். முத்துக்கவுண்டர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கிருஷ்ணகிரியில் 247/1960 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் ரூ.770.40/- செலுத்த உத்தரவானது என்று சொன்னால் சரிதான். அந்த பணத்தை வெங்கடப்ப நாயுடுவால் கட்ட முடியவில்லை.

2. மேற்படி வெங்கடப்ப நாயுடு அவருக்காகவும், தனது பிள்ளைகளுக்காகவும் சேர்ந்து போடியம்மாள் மற்றும் முனியப்ப நாயுடுக்கு மேற்படி தீர்ப்பு தொகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையோடு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பணம் முழுவதும் செலுத்திவிட்டார்கள் அந்த கிரைய பத்திரத்தில் டிகிரி தொகையான ரூ.1000/-த்தை செலுத்தி டிகிரியை வாபாஸ் பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் பணத்தை செலுத்தி டிகிரியை வாபாஸ் பெற்றதற்க்கான ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

3. போடியம்மாள் மற்றும் முனியப்ப நாயுடு எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தில் கண்ட நிபந்தனை நிறைவேற்றப்படாத காரணத்தால் அந்த கிரைய பத்திரம் அமலுக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய பத்திரத்தில் கண்ட

சொத்துக்களை போடியம்மாளும், முனியப்பநாயுடுவும் அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடப்ப நாயுடும் அவரது மகன்களும் தாவா சொத்து மற்றும் மற்ற சொத்துக்களை போடியம்மாள், முனியப்ப நாயுடு மற்றும் உலகறிய எவ்வித இடையூறும் இன்றி தொடர் சுவாதீனத்தில் அனுபவித்து வந்தனர் என்று சொன்னால் சரியல்ல. போடியம்மாள் மற்றும் முனியப்ப நாயுடு வாரிசுகளின் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது.போடியம்மாள் மற்றும் முனியப்ப நாயுடு ஆகியோர்களின் பெயரில் சர்வே எண்.258/8–ல் வருவாய் ஆவணங்கள் உள்ளது.

4. 5 சர்வே எண்களும் போடியம்மாளின் வாரிசுகளின் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது. வெங்கடப்ப நாயுடு குடும்பத்தினர் அனுபவித்து வந்த சொத்து 2 ஏக்கர் 45 சென்ட் ஆகும். அது போடியம்மாளின் சொத்தாகும். வெங்கடப்ப நாயுடு தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு பாகம் பிரித்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 1967 ஆம் வருடமே கிரையம் ஏற்ப்பட்டதால் பாகம் எதுவும் பிரிக்கவில்லை. நான் முன்னுக்கு பின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வெங்கட்ராம நாயுடுவின் பிள்ளைகள் 4 நபர்கள் ஆவார்கள். அவர்களுக்கு நிலமே கிடையாது.

5. காட்டாகரம் கிராம சர்வே எண்கள்.274/7 மற்றும் 276 /1ஏ6, 258/7 காணும் சொத்துக்கள் சின்னசாமி 09.08.2006 ஆம் தேதி வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பொய்யான கிரையமாகும். அந்த கிரைய பத்திரம் செல்லாது என வழக்கு போடவில்லை. வாதி கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்துக்களை பொருத்து போடியம்மாள், முனியப்ப நாயுடு ஆகியோர்கள் பெயரில் எவ்வித வருவாய் ஆவணங்களும் ஏற்ப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து வாதியின் முழு உரிமையிலும், அனுபவித்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி சகுந்தலா எனது பெரியப்பாவின் மருமகள் ஆவார். எனக்கும், வெங்கடப்ப நாயுடுக்கும், வாதிக்கும் பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6. வழக்கு ஆவணங்களை தயார் செய்தது வழக்கை முன் எடுக்க தேவையான வேலைகளை செய்தது நான் தான் செய்தேன் என்று சொன்னால் ஆவணங்களை அதிகாரிகள் தான் கொடுத்தார்கள். நான் கூட இருந்து உதவி வருகிறேன். நான் முதல் விசாரணையில் பார்வைக்காக ஒப்படைத்ததாக சொல்லியுள்ள ஆவணங்கள்

மாரியப்பன் மற்றும் சின்னசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது தவறான ஆவணமாகும். அந்த ஆவணமானது 2007 ஆம் வருடம் எடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்திற்க்கு தண்டபாணி பெயரில் பட்டா ஏற்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் சொத்து எதுவும் இல்லை. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றும், 1–ம் பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.